பதிவு எண் : M 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : மாசி 22 (5—3—68) செவ்வாய் ★ வெளியூர் : மாசி 23 (6—3—68) புதன் [இதழ் : 219

திரை மறைவில்!

மேற்கு வங்காளத்தில் நடந்த 'ஆட்சிக் கவிழ்ப்பு' நாடகத்தில் பெரும் பங்கேற்ற உமாயூன் கபீர், இந்திரா அமைச்சரவையைக் கவிழ்த்துவிடக்கூடுமாம்! சாங்கிரசுப் பெருந்தலைவர்களில் இந்திரா காந்தியை மட்டும் தனிமைப்படுத்த முயற்சிகள் நடைபெற்றுவருகின்றனவாம்! "மொரார்ஜி தேசாய் இவர்களுடன் ஒத்துழைக்க மறுத்தால், தலைமையமைச்சர் பதவி காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவைச் சென்றடைந்துவிடும்" என்றும் கருதப்படுகிறதாம்!

காங்கிரசாட்சியில் நடந்த ஊழல்!

அமைச்சரின் உறவினர்களுக்கு அரசில் வேலை

தேர்தலில் தோற்றவர்களுக்காகப் புதிய பதவிகள் உருவாக்கம் | அரசு ஊழியர் தேர்வுக் குழுவைக் கலக்காமலே அதிகாரிகள் நியமனம்

செய்தி--விளம்பரத் துறையின் பெயரால் நடத்திய சுயநலவேட்டை-- சட்டமன்றத்தில் அமைச்சர்கள் கருணாநிதி---மதியழகன் வெளியிட்ட தகவல்

சென்னை, மார்ச் 5--

" முன்பிருந்த காங்கிரசு ஆட்சியில், தேர்தலில் தோற்ற காங்கிரசுக்காரர்களுக்கும் அமைச்சர்களின் சொந்தக்காரர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காகவே மாவட்ட விளம்பர அதிகாரிகள் பதவிகளை ஏற்படுத்தி, அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கப்பட்டது ; இதை நான் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்.

" கடலூரிலும், பெரம்பலூரிலும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர்களுக்கும், அமைச்சர்களின் சொந்தக்காரர்---நண்பர்களுக்கும், பெரிய காங்கிரசுத் தலைவர்களின் உறவினர்களுக்கும் இந்த அரசிலே கெஜட் பதிவுபெற்ற பதவி அளிக்கப்பட்டது ; இதனால், இந்த அரசிலேயே பல ஆண்டுகளாகப் பணியாற்றிவந்தவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் !

" இப்படி, தங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காகவே மாவட்ட விளம்பர அதிகாரிகள் நியமனம் நடைபெற்றிருக்கிறது "

என்று, இன்று சட்டமன்றத்தில், உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், முன்னாள் காங்கிரசு ஆட்சியின் ஊழல்களில் ஒன்றை அம்பலப்படுத்தினர்.

" மாவட்ட விளம்பர அதிகாரிகளை நியமித்ததில் அரசு ஊழியர் தேர்வுக் குழுவிடம் கலக்காமலேதான் முந்திய அரசு செயல்பட்டிருக்கிறது ; அரசு ஊழியர் தேர்வுக் குழுவைக் கலக்காமல் தானாகவே புதிதாக ஏற்படுத்திகொண்ட திடீர் அமைப்புதான் மாவட்ட விளம்பரத் துறை "

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கூறினர்.

" சிக்கனத்தை முன்னிட்டு, விளம்பரத் துறையை மூடிவிடுவது பற்றி அரசு பரிசீலிக்கிறதா ?"

என்று, சுதந்தராக் கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி கேட்ட கேள்விக்கு, 'இல்லை' என்று பதிலளித்தார்—செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து.

இதனைத் தொடர்ந்து சரமாரியான துணைக் கேள்விகள் எழுந்தன ; அக்கேள்விகளுக்கு அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் விடையளித்துக்கொண்டிருந்தபோதுதான் அமைச்சர்கள் கருணாநிதியும், மதியழகனும் குறுக்கிட்டு மேற்கண்ட தகவல்களை வெளியிட்டனர்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது :—

" செய்தி விளம்பரத் துறையின் ஒரு பிரிவுதான் நீக்கப்பட்டது ; அந்தத் துறை இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதைப் புதிய முறையில் மாற்றி அமைத்திருக்கிறோம்.

" நீக்கப்பட்ட பிரிவில் வேலை நீக்கம் பெற்ற அதிகாரிகளில் ஒருவர் தவிர மற்ற எல்லோருக்குமே மாற்று வேலை கொடுக்கப்பட்டுவிட்டது. நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுள்ள ஒருவருக்குத்தான் வேலை கொடுக்கப்படவில்லை.

" சிக்கனத்தை முன்னிட்டு அல்ல—அந்தப் பிரிவை நீக்கியது. மாவட்ட விளம்பர அதிகாரிகளின் பணி பலனளிக்கவில்லை என்பதால்தான் அந்தப் பணி நிறுத்தப்பட்டது.

" வேலைநீக்கம் பெற்றவர்களில் தற்காலிக அதிகாரிகளும் இருந்தனர். தற்காலிக அதிகாரிகளை வேலைநீக்கம் செய்ய அரசுக்கு முழு உரிமை உண்டு.

" மாவட்ட விளம்பர அதிகாரிகள், காங்கிரசுக் கட்சிப் பிரச்சாரம் செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை ; மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்கள்தான், அப்படிச் சொல்லப்பட்டதாகத் தமது கேள்வி மூலம் தகவல் தந்திருக்கிறார்.

" மாவட்ட விளம்பர அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பிரசார மோட்டார் வண்டிகள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள், அவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள்."

[குறிப்பு ;—முன்னாள் காங்கிரசு ஆட்சியில் செய்தித் துறையின் பெயரால் நடைபெற்றிருக்கும் ஊழல்களை அமைச்சர்கள் அம்பலப்படுத்தி, கேள்விகளுக்குப் பதிலளித்த நேரத்தில், முன்னாள் செய்தித்துறை அமைச்சரான திரு. ஜி. பூவராகனும் அவையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.]

இரயில்வேத் துறையின் தவறான போக்கு

வருவாயைப் பெருக்க வேறு வழி இருக்கையில் கட்டண உயர்வு ஏன்?

நாடாளுமன்றத்தில் முரசொலி மாறன் கண்டன முழக்கம்

புதுடில்லி, மார்ச் 4—

" தவறான திட்டங்களினாலும், அதிகாரக் குவிப்புக் காரணமாகவும் இரயில்வே துறையில் பெரும் அளவு இழப்பு ஏற்படுகிறது ; ஒருபுறம் இரயில்வே வாரியமும்—மற்றொருபுறம் திட்டக் குழுவும் ஒன்றின்மேல் மற்றொன்று குறைகூறிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் கீழ்மட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய முடியாமற்போவதுடன், மற்ற போக்குவரத்துத் துறையினரோடு போட்டியிட முடியாத நிலையும் உருவாகியுள்ளது "

என்று நாடாளுமன்ற மக்களவையில் இரயில்வே நிதி நிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் கழக உறுப்பினர் திரு. முரசொலி மாறன் குற்றஞ்சாட்டினர்.

இங்கிலாந்தில், வட்டார மின் துறை வாரியம் செயல்படும் முறைகளைச் சுட்டிக்காட்டி அவர், 'சுதந்தர அதிகாரமுள்ள இரயில்வே கார்ப்பரேஷன்களை நிறுவவேண்டும்' என்று யோசனை கூறினர்.

இரயில்வேக் கட்டண விகித உயர்வைக் கடுமையாக எதிர்த்தார் ; பேருந்துகளுக்கான கட்டண விகிதங்களைவிட இரயில்வே கட்டணம் விகிதம் அதிகமாக இருப்பதால், எப்படி இரயில்வேயில் வருமானம் அதிகரிக்கும் ?' என்றும் அவர் வினவினர்.

" வருமானக் குறைவு காரணமாக அண்மையில் 'எடுக்கப்பட வேண்டிய இரயில் பாதைகள்' என்று அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில், தென்னகத்தைச் சேர்ந்த பாதைகள்தான் அதிகமாக இருக்கின்றன ; இது அரசியல் உள்நோக்கோடு செய்யப்படுகிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது "

என்றும் சுட்டிக்காட்டிய அவர், மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" மேட்டுப்பாளையம் — உதகமண்டலம் இரயில் பாதையில் வருமானக் குறைவு உள்ளது என்று சொல்லப்படுகிறது ; அப்பாதையை விரிவுபடுத்தி — மின்சார இணைப்பு ஏற்படுத்தி இரயில்வேயின் வருவாயைப் பெருக்குவதற்குப் பதிலாக இரயில்வேத் துறையினர் தவறான நடவடிக்கையை எடுக்கின்றனர்.

" தென்னாட்டிலுள்ள இளைஞர்களால் அங்குள்ள இரயில்வே நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் உள்ள இந்திச் சொற்கள் அழிக்கப்பட்டு விட்டன ; இனி மீண்டும் அந்த நிலையங்களில் இந்தியில் பெயர்ப் பலகைகள் எழுதப்படுவதை நிறுத்த வேண்டும்."

தமிழக இரயில்பாதைகளுக்கு வந்துள்ள ஆபத்து

'மத்திய அரசு தனது முடிவை மாற்றிக் கொள்வதாகத் தெரியவில்லை'

'தொடர்ந்து தமிழக அரசு வற்புறுத்தும்' என சட்டமன்றத்தில் அமைச்சர் தகவல்

சென்னை, மார்ச் 5—

" அண்மையில் சில இரயில் பாதைகளை எடுத்துவிடவேண்டும் என்று மத்திய அரசு செய்துள்ள முடிவினைப் பற்றி, மத்திய அரசோடு இம்மாநில அரசு கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறது ; அவர்கள் கொண்டுள்ள முடிவினை மாற்றிக்கொளவதாக இக்கடிதப் போக்குவரத்து மூலம் தெரியவில்லை ; இப்பாதைகள் பற்றிய தன்னுடைய முடிவினை மத்திய அரசு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்தும் "

என்று, இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

'பொது மொழி' என்பது யாருக்கு--எதற்காக?

மொழித் தீர்மானத்தை நீக்கினால்தான் பிரச்சினைபற்றிப் பேசும் சூழ்நிலை ஏற்படும்

ஒருமைப்பாட்டுத் தியாகம் 'ஒருவழிப் பாதையாக' இருக்கக்கூடாது - எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து அண்ணா விளக்கம்

" ஒரு தவறான கருத்து—ஆனால், வலிவோடு பலரால் பின்பற்றப்படுகிறது! 'இந்தி எப்படியும் வந்தே தீரும்; அது தவிர்க்க முடியாதது' என்ற எண்ணத்தை நாமாக வளர்த்துக்கொண்டிருக்கிறோம்!

" 'இந்தி எப்படியும் வந்தே தீரும்' என்ற பீதியை திராவிட முன்னேற்றக் கழகமும், அதனால் நடத்தப்படுகிற அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை! 'பொது மொழி தேவை' என்று வாதாடப்படுமானால், அது, 'யாருக்குப் பொது மொழி—எதற்காகப் பொது மொழி' என்பதும் விளக்கப்பட வேண்டும்.

'ஒரே நாடு' என்ற உணர்ச்சியை நாம் பெற்றுவிட்டோமா?

" முதலில், 'நாம் இருக்கிற இடம் ஒரு நாடுதானா' என்பதைக் கொஞ்சம் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு பார்க்கவேண்டும்; அதில் தவறு ஒன்றுமில்லை; ஏனென்றால், எத்தனையோ இடங்களில் பல்வேறு நாடுகளை ஒன்றாக இணைத்து ஒரு நாடாக ஆக்கியிருக்கிறார்கள்; அமெரிக்கா, பல்வேறு மாநிலங்களாக இருந்தன; பிறகு அவற்றையெல்லாம் இணைத்து, 'யுனைடெட் ஸ்டேட் ஆப் அமெரிக்கா' என்று ஒன்றுபடுத்தியிருக்கிறார்கள்.

" ஆகையால், 'நாம் இருக்கிற இடம் ஒரு நாடுதானா' என்று நான் கேட்டவுடன், ஏதோ, 'இவன் நாட்டுப் பிரிவினையைப் பற்றிச் சொல்கிறான்' என்று யாரும் அருவருக்கத் தேவையில்லை—அச்சப்படத் தேவையில்லை! நாம், 'ஒரு நாட்டு உணர்ச்சி'க்கு நம்மைப் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிறோம்; ஆனால், 'ஒரு நாட்டு உணர்ச்சி'யை நாம் இன்னமும் பெற்றுவிடவில்லை! இந்த இரண்டு உண்மைகளையும் மறுப்பது, ஒருமைப்பாட்டுக்கு நல்லது அல்ல!

" 'இரயிலிலே சென்ற இரண்டு நண்பர்கள் விளக்கு அணைந்ததும் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக்கொண்டார்கள்' என்று சிறுகதையிலே வரும்; இரயிலோ ஓடிக்கொண்டிருக்கிறது; விளக்கோ அணைந்துவிட்டது; ஆகையால், 'என்ன நேருமோ' என்ற எண்ணத்தில் ஒருவர் கரத்தை மற்றொருவர் பற்றிக்கொண்டு தெலுங்கில் கூறிக்கொள்வதாக அந்தக் கதையில் வரும். அதுபோல், இப்போது இருக்கின்ற ஒருமைப்பாடு, ஏறக்குறைய 'நாமெல்லாம் ஒன்று அல்லவா' என்ற அளவிலே இருக்கிறதே தவிர, 'நாம் அனைவரும் ஒன்று' என்று உணரத்தக்க அளவுக்கு இன்னமும் பக்குவம் பெறவில்லை!

" 'ஒருமைப்பாடு பெறலாமா' என்று கேட்டால், 'பெறலாம்' என்கிறேன்; 'பெற முடியுமா' என்று கேட்டால், 'நம் மனம் பக்குவப்பட்டுவிட்டால் பெறலாம்' என்று சொல்லுகிறேன்; 'பெற்றுவிட்டோமா' என்று கேட்டால், 'பெறவில்லை' என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்.

ஊட்டப்பட்ட உணர்ச்சி நடைமுறையில் நிலவியதா?

" ஆண்டிலே இரண்டு நாட்கள் — ஆகஸ்டு 15-லும், சனவரி 26-லும்—'நாமெல்லாம் ஒன்று' என்ற ஒருமைப்பாட்டு உணர்வைப் பெறுகிறோம்! தேசியக் கவி பாரதியார் இதற்கு முன்னாலே, 'முப்பது கோடி முகமுடையாள்' என்றும், 'ஒரே ஒரு மனமுடையாள்' என்றும் சொன்னார்; இன்னும் சொன்னார்—'ஆயிரம் உண்டிங்கு சாதி; எனில், அந்நியர் வந்து புகல் என்ன நீதி' என்று! இவையெல்லாம், உள்ளத்துக்கு ஊட்டப்பட்ட உணர்ச்சியே தவிர, நடைமுறைக்கு அது சரியாக இருந்ததா என்றால், இல்லை!

" இப்போதுகூட வடக்கேயுள்ள பெருந் தலைவர்களின் பெயராலே தமிழகத்திலே மட்டும் அல்ல—தென்னாட்டு மாநிலங்களிலே பூங்காக்களைப் பார்க்கிறோம்! சதுக்கங்களைப் பார்க்கிறோம்! அங்காடிகளைப் பார்க்கிறோம்! படிப்பகங்களைப் பார்க்கிறோம்! ஆனால், தென்னாட்டுப் பெரியவர்களின் பெயராலே வடக்கே ஒரு சதுக்கத்துக்குப் பெயர்—ஓர் அங்காடிக்குப் பெயர்—அல்லது வேறு பலவகையான சின்னத்திற்குப் பெயர் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம்!

" ஆதலால்தான் சொல்லுகிறேன்—ஒருமைப்பாடு என்பது, இரண்டு பக்கத்திலேயும் நடக்க வேண்டும்: 'ஒரு பக்கத்திலே எல்லாத் தியாகங்களும் இருக்கும்: மறு பக்கத்திலே தியாகமே இருக்காது' என்ற நிலை, ஒருமைப்பாட்டை வளர்க்காது! இப்போது ஒருமைப்பாடு அல்லது இணைப்பு மொழி என்ற பிரச்சினையை யோசிப்பதற்குக்கூட, முதலிலே மத்திய அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ரத்து செய்வதன் மூலம் அதற்கேற்ற சூழ்நிலை ஏற்படும்!"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். சட்டமன்றத்தில், ஆளுநர் உரைமீது நிகழ்ந்த விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையில் மொழிச் சிக்கல் பற்றியும், ஒருமைப்பாடு குறித்தும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:—

மாறுதல் செய்ய உரிமை இருக்கிறது!

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், 'இந்தியை ஒழித்துவிட்டோம்--இந்தியை ஒழித்துவிட்டோம் என்று பேசிக்கொள்கிறீர்களே—எங்கே ஒழித்துவிட்டீர்கள்?' என்று கேட்டார். எங்களால் ஒழிக்கக்கூடிய இடத்தில் ஒழித்தோம்! எங்கள் அரசு நடக்கிற இடத்தில், இந்தி பாட மொழியாக இருப்பதை ஒழித்தோம்!

மத்திய அரசு, இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தொடர்க் கூட்டத்தில்கூட, 'இப்படிச் செய்தது அரசியல் சட்டத்திற்கு விரோதம்' என்றோ, 'நடைமுறைக்குத் தவறு' என்றோ, சொல்லவில்லை; ஏனென்றால், கல்வி என்பது மாநில அரசுக்குச் சொந்தமானது; அதிலே எந்தவிதமான மாறுதலும் செய்ய இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் செய்கிற நேரத்தில் மத்திய அரசு குறுக்கிடக் கூடாது.

இந்தத் துறையில் 'அனைத்திந்திய சர்வீசு' என்ற அளவில்—கல்வித் துறை, எஞ்சினீயரிங் துறை, மருத்துவத் துறை, வனத் துறை—என்று வந்த நேரத்திலெல்லாம், முன்பு இருந்த காங்கிரசு அரசு அவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது; நாங்கள் வந்தபிறகு, 'அப்படிப்பட்ட அனைத்திந்திய சர்வீசுகளை ஏற்றுக்கொள்ள முடியாது' என்று தெரிவித்திருக்கிறோம்.

ஆகையால், இந்த மாநில அரசின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் நாங்கள் மிகத் தீவிரமாக இருக்கிறோம் என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள எந்தவிதத் தயக்கமும் இல்லை!

'மிகப் பெரிய ஏமாளிகள் என்பதுதான் பொருள்!

'குற்றச்சாட்டு' என்று எண்ணிக்கொண்டு நண்பர் கருத்திருமன் அவர்கள் சொன்னதை, 'பாராட்டுதல்' என்று எடுத்துக்கொள்ளுகிறேன்; 'கவர்னர் உரையில் முழுக்க முழுக்க முன்னேற்றக் கழகத்தின் கொள்கைதான் இருக்கிறது' என்று அவர் குற்றச்சாட்டாகச் சொன்னார்.

அரசை நடத்துகின்ற கட்சிக்காரர்கள், எந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களுக்கு அதை நிறைவேற்றுவதில் நாட்டம் இருக்கிறது; 'இருக்க வேண்டும்' என்பதற்குத்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது!

ஆட்சிப்பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டு, வேறு கட்சியின் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று எதிர்பார்த்தால், அவர்கள் கணக்குப் போட்டிருப்பதைவிட, 'மிகப் பெரிய ஏமாளிகள்' என்றுதான் பொருள்படும்!

கவர்னர் அவர்களுடைய உரையில், 'மத்திய அரசு—மாநில அரசு தொடர்பு நிலை திருத்தி அமைக்கப்பட வேண்டும்' என்ற கருத்தைத் திட்டவட்டமாக வைத்திருக்கிறார்; நல்ல முறையில் அதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்பதால், கவர்னர் உரைக்கு எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டது முறையாகும்.

அதை எடுத்துக்கொண்டு பேசுகையில், 'இதனால் ஒருமைப்பாடு கெட்டுவிடும்' என்று வாதாடினால், நான் வெளிப்படையாகச் சொல்லுகிறேன்—'மூடி மறைத்தால்தான் ஒருமைப்பாடு கெடும்' என்று!

நல்லதும் அல்ல--பலனும் தராது!

'இப்படி இப்படிக் கூடி வாழலாம்; இப்படி இப்படி அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள்ளலாம்' என்பதில் வெளிப்படையான கருத்து ஏற்பட்டாலன்றி, ஒருமைப்பாடு உருவாவதற்கு வழியில்லை! திருக்குறளில் கூறியுள்ளபடி, ஓர் குடத்திற்குள் பாம்பை விட்டுக் குடியிருப்பது எவ்வளவு கடினமோ அது போன்ற நிலை அது!

நமக்குள் இருக்கின்ற அதிகாரத் தொடர்புகளைப்பற்றி விவாதித்துத் திருத்திக்கொள்ளாமல், ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுவது நல்லதும் அல்ல—பலனும் தராது!

அதை அடிப்படையாகக் கொண்டு—மொழிப் பிரச்சினை பற்றித் தீர்மானம் வந்தபோது—திரு. ம. பொ. சி. அவர்கள், 'மத்திய அரசில் குவிந்திருக்கிற அத்தனை அதிகாரங்களும் பரவலாக்கப்படும் அளவுக்கு நிலைமை இருந்தால் இந்தப் பிரச்சினை தீரும்' என்று விளக்கினார்கள்.

கவர்னர் தமது உரையில், 'மாநில அரசுக்கும்—மத்திய அரசுக்கும் இருக்கிற தொடர்புகள் திருத்தி அமைக்கப்படல் வேண்டும்; அதற்காக அரசியல் சட்டத்தைக்கூட ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்; அது முழுக்க முழுக்க இந்த அரசின் கொள்கை ஆகும்.

இந்த அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது; இதில் ஒளிவுமறைவு இல்லை! வெட்கப்பட—தயக்கப்பட ஒன்றும் இல்லை!

பரவலாகிவருவதைத் தவிர்க்கவே இயலாது!

ஆனால், இது எங்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பில் இல்லாத பல இடங்களிலும் இந்தக் கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது.

திரு. நம்பூதிரிபாடு அவர்கள் முதலமைச்சராக இருக்கும் கேரள மாநிலத்தில் இந்தக் கோரிக்கை வெகு வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது.

முதலமைச்சர்கள் மாநாடு இரண்டு திங்களுக்குமுன் நடைபெற்றபோது, 'பொருளாதாரத்தில் இப்படி இப்படி அதிகாரங்களைப் பரவலாக்கலாம்' என்ற ஒரு புத்தகத்தை திரு. நம்பூதிரிபாடு அவர்கள் வெளியிட்டு, அதை முதலமைச்சர்கள் மாநாட்டின் பரிசீலனைக்கு வைத்தார்கள்.

அதைப்போலவே, வேறு பல இடங்களிலும்—வேறு பல மாநிலங்களிலும் அந்த எண்ணம் பரவிக்கொண்டுவருகிறது.

எனக்குத் தெரிந்தவரையிலும், அடுத்த 10-ஆண்டுகளில் மிக முக்கியப் பிரச்சினையாக எல்லா மக்கள் மனத்திலும் மேலோங்கி நிற்க இருப்பது இந்தப் பிரச்சினைதான் என்று நிச்சயமாக உணருகிறேன்.

அப்படி நான் உணருகின்ற காரணத்தினால், 'உணர்ச்சியை முன்வைப்பவன்' என்று மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தவறான கருத்துக்குத் துணைபோக முடியுமா?

அப்படி, 'பரவலாக்க வேண்டும்' என்று கவர்னர் உரையில் இருப்பதை வலிவாக்க, 'இந்தி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்' என்று சொல்லப்படுகின்ற கருத்தை இந்த அரசு மறுத்திருக்கிறது; அதுவும் கவர்னர் பேருரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனக்குத் தமிழ் தாய் மொழி—ஹாண்டேவுக்குக் கன்னடம் தாய் மொழி—வினாயகத்திற்குத் தெலுங்கு தாய் மொழி—என இருக்குமானால், மூன்று பேர்களுக்கும் சேர்ந்த ஒரு மொழி கன்னடமாகவோ, தமிழாகவோ, தெலுங்காகவோ இருக்கமுடியாது!

இந்த மூன்று மொழிப் பிரிவினருக்கும் பொதுவான மொழி, இந்த மூன்று மொழிகளிலிருந்து கிடைக்காது; இந்த மூன்று மொழிகளுக்கும் அப்பாற்பட்ட மொழிதான் பொது மொழியாக இருக்கும்.

'அப்பாற்பட்ட மொழி' என்று சொல்லும்பொழுது, 'ஆங்கிலம் அந்த இடத்திற்கு வருகிறது' என்று தமிழக அரசு கருதுகிறது.

பொருளற்றவாதத்தால் பயன் என்ன உண்டு!

'இணைப்பு' மொழியாக ஒன்று இருக்கவேண்டாமா?' என்கிறார்கள்.

சுவிட்சர்லாந்தில் ஐந்து மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. இந்த ஐந்து மொழிகளில் எந்த மொழியையும், 'இணைப்பு மொழி' என்று அவர்கள் வைத்திருக்கவில்லை.

சிறிய நாடாகிய அங்கேயே அப்படி வைத்திருக்கிறார்கள் என்றால், இங்கு முடியாதா என்பதுதானே தவிர, வேறொன்றுமில்லை!

தென்னாப்பிரிக்காவில் மூன்று மொழிகள் ஆட்சிமொழிகள்; ஆனால், 'இணைப்பு மொழி' என்று அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. 'இணைப்பு மொழி' என்று நாமாக தருவித்துக்கொண்டு இருக்கிறோம்.

'ஏகாதசி தினத்தன்று விரதம் இருப்பது, பட்டினி கிடப்பதற்குச் சமம்' என்று சொல்லிக்கொண்டு, ஏகாதசி அல்லாத நாளில் விரதம் இருந்தால் அதில் பொருள் இருக்காது! ஏகாதசி அல்லாத நாளில், 'இன்று ஏகாதசி நாள்' என்று நினைத்துக்கொண்டு, 'நான் சாப்பிடமாட்டேன்' என்று சொல்லுகின்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது!

அதுபோல், 'நமக்கு இணைப்பு மொழி ஒன்று தேவை' என்று ஏற்றுக்கொண்டு, அந்த இணைப்பு மொழி, 'இந்தியாகத்தான் இருக்க முடியும்' என்று வாதிடுவது, சரியான வாதம் அல்ல!

ஆகையால், 'இணைப்பு மொழி—பொது மொழி' என்ற காரணத்தைக் காட்டி, இந்தியப் பிரதேச மொழிகளில் ஏதாவது ஒரு

(3-ம் பக்கம் பார்க்க)

நிலமில்லாதவர்கள் பயிரிடக் காட்டு நிலங்கள்

குத்தகைக்கு வழங்கத் தமிழக அரசு திட்டம்

புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்போர்மீது நடவடிக்கை---அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விளக்கம்

திருச்சி, மார்ச் 4—

"புறம்போக்கு நிலங்களிலும், காட்டு நிலங்களிலும் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களுக்கு அரசு சிறிதும் தாட்சண்யம் காட்டாது; அவர்கள் எந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், ஆக்கிரமித்த நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்"

என்று வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் திருச்சி மாவட்ட கால்நடை வளர்ச்சிக் கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் அறிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது :—

'நிலமில்லாத ஏழைகள் சாகுபடி செய்வதற்குப் புறம்போக்கு நிலங்களை வழங்க அரசு விரும்புகிறது. அநேகமாக சாகுபடி செய்வதற்குக் குத்தகைக்குக் காட்டு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு அரசு வழங்கும்; இதுதான் அரசின் கொள்கை; ஆனால், இது சட்டவரம்புக்கு உட்பட்டுத்தான் செய்யப்படும்; இந்த வகையில் சட்டத்தை மீறி ஆக்கிரமிப்புச் செய்கிறவர்கள், நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.''

மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம்

நான்காம் திட்டத்தில்: சேர்க்கப் பரிந்துரை

சென்னை, மார்ச் 4—

"மாயூரம் புகைவண்டிச் சந்திப்பு நிலையத்திற்குத் தெற்கேயுள்ள கேட்டின் அருகில் மேம்பாலம் அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளது; இது பற்றிய செயற்குறிப்பை நான்காம் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது; வரிசைமுறைப் படியும், நிதி வசதிக்கேற்பவும் இந்த வேலை எடுத்துக்கொள்ளப் படும் "

என்று சட்டமன்றத்தில், சமூக உறுப்பினர் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னை நகரில் கொசுத் தொல்லை குறைய நடவடிக்கை

அமைச்சர் சாதிக் பாட்சா விளக்கம்

சென்னை, மார்ச் 4—

"நகரில் கொசுத் தொல்லையை நீக்க இயன்றவரை எல்லா நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன; இதனால் கடந்த சில வாரங்களாகக் கொசுத் தொல்லை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது''

என்று, அமைச்சர் சாதிக் பாட்சா, சட்ட மன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

நகரில் கொசுப் பெருக்கத்துக்கான காரணத்தையும், அவற்றை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் விளக்கி அவர் அளித்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

"பெரும்புயல் வீசியதாலும், இதுவரை கண்டிராத பெருமழை பெய்ததாலும், மழை நீர் வடிகால்களும் ஏனைய வடிகால்களும் பெருமளவு தூர்ந்துபோய் விட்டன. வடிகால்கள் சரிந்து உட்புறமாக விழுந்ததாலும், வடிகால்களுக்குள் அடித்து வரப்பட்ட பொருள்கள் தடை உண்டாக்கியதாலும், மழைநீர், வடிகால்கள் முதலியவற்றில் பூமிக்கு அடியில் செல்லும் மின் சாரக் கம்பி வடங்கள் குறுக்கிடுவதாலும், வடிகால்கள் இவ்வாறு தூர்ந்து போய்விட்டன. இவற்றில் தூர் எடுப்பதற்குச் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"புதிதாகக் கட்டப்பட்ட மழை நீர் வடிகால்கள் பெரும்பாலானவை முறைப்படியான கொசுக் கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படுகின்றன.

"புழு, பூச்சிகளை உட்கொள்ளும் மீன்களை நகரில் உள்ள சுமார் 40,000 கிணறுகளில் விட்டு வளர்ப்பதன் மூலம் அவற்றில் கொசுக்கள் ஒழிக்கப்பட்டன. 1967 சனவரி வரையில், நீரில் குளோரின் கலப்பது மூலமாகக் காலரா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயத்தில் மாநகரில் வாந்திபேதி பரவும் நிலையிருந்ததால் அவை அகற்றப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. கொசுக்கள் பெருமளவில் உற்பத்தியாவதற்கு இக்கிணறுகள் வாய்ப்பாக இருப்பதால், அவற்றில் மீண்டும் அந்த வகை மீன்கள் விட்டு வளர்க்கப்படுகின்றன.

"காற்றுப்போக்கி வசதியுடன் கூடிய தூய்மைத் தொட்டிகள் புதிய குடியிருப்புக்களில் அமைக்கப்படடுள்ளன. அவை, கொசுக்கள் பெருமளவில் பெருகக் கூடிய இடங்களாகும். கொசுக்கள் அவற்றுள் புகாமல் தடுப்பதற்கான சாதனங்களைக் கொண்டு அந்தக் காற்றுப் போக்கிகளை அக்குடியிருப்புக்களின் உரிமையாளர்கள் அல்லது அவற்றில் குடியிருப்பவர்கள் மூடிவைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். மாளிகை போன்ற அமைப்புள்ள வீடுகளில், பெரும்பாலும் காணப்படுகிற தொட்டிகள், நீர்த் தொட்டிகள், எருக்குழிகள், பழம் பானைகள் போன்றவற்றில் கொசுக்கள் பெருக வாய்ப்புள்ளதால் அவை குறித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பக்கிங்காம் கால்வாயும், ஆறுகளும், கொசுக்கள் உற்பத்தியாகிப் பெருகும் நிலையான இடங்களாகும்; இந்த நீர் நிலைகளும், நகரில் உள்ள முக்கிய கழிவு நீர் வாய்க்கால்களும் கொசு போன்ற பூச்சிகள் மிகுதியாகப் பெருகிப் பரவுவதற்குக் காரணமாகின்றன; அதன் விளைவாக எண்ணற்றவர்கள் தொல்லைக்குள்ளாகின்றனர். அவற்றின் ஓரங்களைச் செம்மைப்படுத்துவதன் மூலமும், பாசியை அகற்றுவதன் மூலமும், அவற்றில் புழுக் கொல்லி மருந்துகள், சலவைப் பொடி முதலியவற்றைக் கலப்பதன் மூலமும் கொசுக்கள் பெருகாமல் இருக்க மாநகராட்சி இயன்ற அளவுக்கு முயன்று வருகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் கொசுக்கள் பரவுவது தடுக்கப்படுவதுடன் அவற்றிலிருந்து வெளிவரும் நாற்றமும் குறையும்."

நிதி நிலை பற்றி அண்ணா விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மொழியை அந்த இடத்திற்குக் கொண்டுவந்தால் மற்றமொழிப் பிரிவினர் சந்தேகிப்பார்கள்—சஞ்சலப்படுவார்கள் — சங்கடப் படுவார்கள்; வேறு வகையான தொல்லைகள் ஏற்படும்' என்று கவர்னர் அவர்கள் தம் பேருரையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

ஒரு முனையில் நின்றால் உடனடியான ஆபத்து நீங்கும்!

நம்மையும் அறியாமல் ஒரு விஷயத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒருமித்த கருத்துக்கு வந்திருக்கிறோம்; அதாவது டெல்லியில் நிறைவேற்றப்பட்ட மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பொறுத்தவரையில், எல்லா அரசியல் கட்சிகளும், 'அவ்வாறு நிறைவேற்றப்பட்டதன் விளைவாக நம் நாட்டு மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள்; நம் நாட்டிலிருந்து வேலைக்குச் செல்கிறவர்களுக்குப் புதிய பளு ஏற்படுகிறது' என்று சுட்டிக்காட்டியுள்ளன.

'நமக்குள் ஒரு சமரசம் ஏற்பட்டு நாம் ஒரு முனையிலிருந்து வேலை செய்ய முடியுமா?' என்றால், இந்த முனையிலே இருந்துதான் வேலை செய்ய முடியும்;—'இந்தத் தீர்மானத்தை ரத்துசெய்வது; இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாமல் விட்டு வைப்பது; அல்லது, இந்தத் தீர்மானத்தை அடியோடு எடுத்துவிடுவது' என்ற இந்த ஒரு இடத்திலே எல்லா அரசியல் கட்சிகளும் பணியாற்றலாம்.

ஆனால், 'அதோடு நின்றுவிடுமா' என்றால், நிற்கவில்லை; அது, உடனடியாக வரக்கூடிய ஆபத்தைத்தான் நீக்குகிறது!

அதற்கு அடுத்து 'எந்த மொழி ஆட்சிமொழியாக ஆகவேண்டும்; எந்த மொழி, இணைப்பு மொழியாக ஆகவேண்டும்' என்ற பிரச்சினை வருகிறது.

ஒன்றுகூடிப் பேச வேண்டுமென்றால்....

இந்த மாமன்றத்தில் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்தில், 'தலைமையமைச்சர், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசவேண்டும்; ஓர் உயர்மட்ட மாநாடு நடத்த வேண்டும்' என்று குறிப்பிட்டோம்.

ஒரு கலந்துரையாடல் நடைபெற வேண்டுமென்றும், அந்தக் கலந்துரையாடல் நடைபெறுவதற்கு முன்பு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இந்தத் தீர்மானத்தின்மீது ஒன்றுபட்ட கருத்தைத் தெரிவித்திருப்பதால் முதலில் இந்தியப் பேரரசு, அவர்களுடைய தீர்மானத்தைத் திருப்பப் பெறவேண்டும். அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டால்தான் ஒன்றுகூடிப் பேசுவதற்குக்கூட ஒரு சுமுகமான நிலைமை ஏற்படும்.

கருத்தைச் சொல்ல எவ்வாறு இயலும்?

இலையிலே எல்லாவற்றையும் வைத்தபின் கையிலே கட்டுப் போட்டுவிட்டு, 'உனக்கு விருப்பமானதைச் சாப்பிட்டுக்கொள்' என்று சொன்னால் எப்படி நடக்காதோ, அது போல்தான் இருக்கிறது—'கலந்துரையாடுவது' என்பது!

கைக்கட்டை அவிழ்த்துவிட்டு, 'இலையிலே உள்ளவற்றை எடுத்துக் கொள்' என்றால்தான் எடுத்துக்கொள்ள முடியும்!

அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் நம்முடைய கரங்களை கட்டுப்படுத்திவிடுகிறது! அந்தக் கட்டுக்களை அவிழ்த்து விட்டு விட்டு, 'இலையிலே வைத்திருப்பதில் உங்களுக்கு எது வேண்டும்' என்று கேட்டால்தான்—கையிலே உள்ள கட்டு நீங்கினால்தான்—கருத்தைச் சொல்ல முடியும்.

எனவே, இந்தச் சமத்துவத்தில் இந்தியப் பேரரசு ஈடுபட வேண்டுமென்று நான் இந்த அவையின் சார்பிலும் அரசின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தில் இரயில்வே மேம்பாலம்

டில்லிபணம் ஒதுக்கியதும் வேலை துவங்கும்

சென்னை, மார்ச் 4—

"தாம்பரத்தில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ. 13,51,000 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது; அதற்கு, 'மாநில அரசு, ஒதுக்க வேண்டிய நிதி ஒதுக்கப்படவில்லை' என்று கூறுவது சரியல்ல; மத்திய அரசுதான் இன்னும் பணம் ஒதுக்கவில்லை; அது ஒதுக்காததற்குக் காரணம் எதுவும் கூறப்படாததால், விரைவில் நிதி ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்; நிதி ஒதுக்கியதும் அந்த வேலை மேற்கொள்ளப்படும் "

என்று, சட்டமன்றத்தில், முனு ஆதி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் பொதுப் பணித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஏழு இரயில்வே மேம்பாலம்

மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை

சென்னை, மார்ச் 4—

"தமிழகத்தில் ஏழு இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்க மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது; மீண்டும் அது பற்றி வற்புறுத்தப்படும்''

என்று சட்டமன்றத்தில், பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"புகைவண்டிகள் போக்குவரத்து அதிகமாக உள்ள இடத்தில் மேம்பாலம் அமைக்கும் செலவை இரயில்வேத் துறையும், சாலைப் போக்குவரத்துக்கள் அதிகமாக உள்ள இடத்தில் மேம்பாலம் அமைக்க மாநில அரசும் ஏற்கின்றன.

"நகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகளில் மேம்பாலம் அமைக்க இரயில் பாதை இருக்கும் இடத்தின் கட்டுமானச் செலவை மட்டும் இரயில்வே ஏற்கிறது. நகராட்சிப் பகுதிக்கு வெளியே உள்ள இடங்களில் கட்டப்படும் மேம்பாலத்தின் முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்கிறது."

தமிழக அரசின் கலப்பு மணப் பரிசுத் திட்டம்

இதுவரை அறுபது பேர்களிடமிருந்து மனுக்கள்

விதிமுறை வகுக்கப்பட்டபின் பரிசுகள் வழங்கப்படும்

சென்னை, மார்ச் 4—

"தங்கப் பதக்கம் பரிசு வழங்கப்படுவதற்காக 1967 சூலை, ஆகஸ்டுத் திங்களில் மனு எதுவும் வரவில்லை"

என்று கே. விநாயகத்தின் கேள்விக்குப் பதிலளித்த செய்தித் துறை அமைச்சர் திரு'மதி சத்தியவாணிமுத்து அவர்கள், துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"இதுவரையில் கலப்புத் திருமணம் செய்துகொண்டதாகத் தெரிவித்துத் தங்கப் பதக்கம் பரிசு கோரி 60 மனுக்கள் வந்திருக்கின்றன; அவற்றில் சில, தங்கப் பதக்கம் தரப்படும் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே நடைபெற்ற திருமணங்களாகும்.

"கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்குத் 'தங்க மெடல்' பரிசு அளிக்கப்படும் திட்டத்திற்கான விதிமுறைகள் இன்னும் வகுக்கப்படவில்லை; 'தங்க மெடலி'ன் மதிப்பு எந்த அளவுக்கு இருக்கலாம் என்றும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

"சாதி மட்டுமன்றி, சமயம் மாறித் திருமணம் செய்துகொள்வதும் கலப்புத் திருமணமாகத்தான் கருதப்படும். தாழ்த்தப்பட்டவர்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு அதிக மதிப்புள்ள மெடல் கொடுப்பது என்பது இல்லை; எல்லோருக்கும் ஒரேமாதிரியான மெடல்தான் வழங்கப்படும்.

"தங்க மெடல் பரிசுத் திட்டம் அறிவிக்கப்படுமுன் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கெல்லாம் பரிசு கொடுக்க இயலாது.

"கலப்புத் திருமணத்தைக் கட்டாயமாக்க இயலாது; சாதி சமய வேற்றுமையை ஒழித்து சமவுரிமை ஏற்படுத்தும் நோக்கத்தில்தான் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்ந்த சாதி—தாழ்ந்த சாதி என்றில்லாமல், சாதிகள் ஒழிந்த சமத்துவச் சமுதாயம் அமைய மக்களிடையே உறுப்பினர்கள் நல்ல பிரசாரம் செய்தால் கலப்பு மணங்கள் அதிகரிக்கும்."

தமிழ்நாட்டில் 290 கூட்டுச் சாகுபடி பண்ணைகள்

இயங்கும் விதம் பற்றி அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 4—

"தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யும் 290 பண்ணைகள் இருக்கின்றன; இவற்றின் மூலம் 29,900 ஏகர் பரப்புள்ள நிலம் சாகுபடி செய்யப்படுகிறது''

என்ற தகவலை, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அவர் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"விவசாயிகளும், மிராசுதார்களும் தங்கள் நிலங்களை ஒன்றுகச் சேர்ந்து சாகுபடி செய்யும் வகையில் அமைந்துள்ள கூட்டுறவுப் பண்ணைகள் 190-ம், பல தனிப்பட்டவர்கள் சேர்ந்து அமைத்துள்ள பண்ணைகள் 100-ம் உள்ளன.

"இந்த நூறு பண்ணைகளும் இயங்கும் விதம் மனநிறைவூட்டுவதாக இல்லை. முதலில் சொன்ன பண்ணைகள் நல்ல முறையில் இயங்குகின்றன.

"தனிப்பட்ட சங்கங்களுக்கு ரூ. 19 இலட்சம் கடனும்—ரூ. 16 இலட்சம் உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

"கூட்டுப் பண்ணைகளுக்குத் தொழில் நுணுக்க உதவிகள் அளிக்கப்படுகின்றன; அவை மூலம் ரூ. 14 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

"எல்லாச் சங்கங்களுமே சிறந்த முறையில் இயங்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

"தஞ்சை மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்கள் நடத்தும் கூட்டுப் பண்ணையும், தனிப்பட்ட குத்தகைதாரர்கள் நடத்தும் பண்ணைகளும் நல்ல முறையில் இயங்குகின்றன."

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

சில நாட்களுக்குமுன் செங்கற்பட்டில் ஓ. வி. அழகேசன் பேசியிருப்பதற்கும்—நேற்று சட்டமன்றத்தில் கே. விநாயகம் பேசியிருப்பதற்கும் எத்துணையோ வேறுபாடு இருக்கிறது!

உலகில் இயற்கை, எந்த ஓர் இரண்டு மனிதர்களுக்கு இடையிலும் உருவ ஒற்றுமையைத்தான் கொடுக்கவில்லையே தவிர, நல்ல சிந்தனைகளில் உள்ளம் ஒத்து இருப்பதனைத் தடைசெய்திருப்பதாகத் தெரியவில்லை!

முதலமைச்சரின் உடல்நலக் குறைவு, செங்கற்பட்டில் நடைபெற்ற காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில் அழகேசன் அவர்களால் கீழ்த்தரப் பிரச்சாரத்துக்குப் பயன்பட்டிருக்கிறது; ஆனால் அவரது கட்சியின் சட்டமன்றக் கொறடாவான விநாயகம், 'அரசியல் பண்பு தமிழகத்தில் மாசுபடவில்லை' என்பதனை மெய்ப்பிப்பதற்காகவோ, **அல்லது அழகேசன் பேச்சுக்கு ஒரு கழுவாய் தேடுவதற்காகவோ**, ஓர் ஒழுங்குப் பிரச்சினையைச் சட்டமன்றத்தில் எழுப்பி, அண்ணா அவர்களின் உடல்நலத்தில் கவலையையும், உடல்நிலை சீர்படுவதில் அக்கறையும் காட்டியுள்ளார்!

'நண்பர் விநாயகம்—நண்பர் விநாயகம்' என்ற முதலமைச்சரின் 'இடிப்பு' கலந்த குரலை சட்டமன்றத்தில் சில நாட்களாகக் கேளாதது, விநாயகத்துக்கே என்னவோபோல் இருந்திருக்கவேண்டும்!

கட்சி வேறுபாடு கடந்த சனநாயகத்தில் கடைபிடிக்க வேண்டிய அரசியல் நாகரிகத்தினை விநாயகம் காட்டியிருப்பது, அழகேசனுக்கு ஒரு அறிவுரையாக அமையட்டும் என நம்புவோம்!

★

இன்றைய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் பார்வையின்படி, நேற்றைய நிதிநிலை அறிக்கை விவாதங்களில், விநாயகத்தின் பேச்சு 'சிறப்பு'மிக்கதாக இருந்திருக்கிறதாம்! நல்லவேளையாக, எந்தவகையில் 'சிறப்பு' என்று குறிப்பிடாததும் ஒரு வகையில் சாமர்த்தியந்தான்!

ஏனென்றால், சட்டம் படித்த விநாயகம்—அத்துறையில் தொழிலும் ஆற்றியிருக்கும் விநாயகம், 'தமது கருத்தினைத்தான் விவாதித்திருக்கிறார்' என்று சொல்லலாமே தவிர, 'வென்றிருக்கிறார்' எனக் கருதுவதற்கு இடமில்லை!

நீதிமன்றங்களில் மது வழக்குகள் குறைந்திருப்பது, குடிப் பழக்கம் அதிகரித்திருப்பதாகத்தான் அவரது கண்களுக்குப் பட்டிருக்கிறது; அல்லது மது வழக்குகளே போலீசார் போடாததாகத்தான் அவரது கருத்தில் பதிந்திருக்கிறது!

இந்த வாதம், வழக்கறிஞர்களுக்குள்ளேயே இருக்கும் ஒரு 'தொழில் துறை' கதையினைத்தான் நமக்கு நினைவுபடுத்துகிறது.

"வரவர நிலைமை சுத்த மோசமாகப் போகிறதப்பா! ஒரு வம்பு—வழக்கு ஏதாவது வருகிறதா பார்த்தாயா?" என்று 'கேஸ் கட்டு' குறைந்த வழக்கறிஞர், அது ஏற்கனவே குறைந்திருக்கும் மற்றொரு தொழில் நண்பரிடம் குறிப்பிட்டாராம்!

அந்த வழக்கறிஞர்களின் 'தொழில் துறை' பார்வையின்படி, சமுதாயம், 'கெட்டி'ருக்கிறது; ஏனெனில், 'வம்பு வழக்குகள்' குறைந்துவிட்டன! மக்களிடையே நோய் நொடி குறைந்திருப்பது மருத்துவர்களுக்கு வருத்தத்தைக் கொடுப்பதில் வியப்பேதும் இல்லையல்லவா?

சட்ட நுணுக்கம் தெரிந்த விநாயகம் போன்றவர்களே ஒட்டுமொத்தமாக, 'சமுதாயத்தில் மக்கள், சட்டத்துக்கும் போலீசுக்கும் மதிப்பளிக்க மறுக்கிறார்கள்' என்று பேசுவது, நடுநிலையாளர்களுக்கு மனச் சங்கடத்தைத்தான் கொடுக்கிறது!

'சிவப்புக் கொடி' தூரத்தில் தெரிந்ததும் குதிருக்குள் மறைந்த அந்தக் காலத்தை மனக் கண்ணால் பார்த்து—மாவட்ட ஆட்சியாளர் மாநாட்டில் அண்ணா அவர்கள் கூறியதுபோல்—'மக்களின் நண்பர்களைப்போல் கலெக்டர்கள் நெருங்கி வருகிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ள இந்தக் காலத்தையும் ஒப்பிட்டு இந்தக் குற்றச்சாட்டை விநாயகம் எழுப்பியிருந்தால் அதற்காக வருத்தப்பட வேண்டியது, அவர் மட்டும்தான்!

அல்லது, விநயமாகவே விநாயகம் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியிருந்தால், அதற்கான புள்ளி விவரங்கள் இல்லையேல், பின்னணி நிலைமைகள் அவரால் எடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்!

"குறைந்த வரி—நிறைந்த நன்மைகள்—விலைவாசிக் கட்டுப்பாடு ஆகிய மூன்றும் கொண்டதுதான் நல்ல நிதிநிலை அறிக்கை" என்று விளக்கியிருக்கும் விநாயகம், அண்ணாவின் பட்ஜெட்டில் அது இருப்பதனை ஒப்புக்கொள்ள மறுத்தாலும், 'அது எப்படி இல்லை' என்பதனையாவது நடுநிலையுடன் நின்று விரல்விட்டு எண்ணியிருப்பதாகக் காணோம்! தெரிவித்திருக்கும் ஒன்றிரண்டு கருத்துக்களும், கட்சிக் கண்ணோட்டத்தில்தான் இருக்கின்றன!

"தி.மு.க.-வின் முக்கியக் கொள்கைகளை, பட்ஜெட் கொண்டிருக்கவில்லை" என்று ஓர் இடத்தில் கூறியிருக்கிறார்; ஆனால், அதற்கு அவரே மற்றோர் இடத்தில்—அவரையும் அறியாமல் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்—'இது என்ன—பக்கத்துக்குப் பக்கம் மத்திய அரசு மீது குற்றச்சாட்டுகளா' என்று!

"அதிக அதிகாரம்—கூடுதல் நிதி உதவி இரண்டும்தான், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின் கழக அரசின் மையக் கொள்கை" என்பதனை இது விளக்கவில்லையா!

★

நான்காம் நாள் பொது விவாதமான நேற்று, கழக உறுப்பினர்கள் எட்டுப் பேர் பங்கு கொண்டிருக்கின்றனர்.

"நகர மக்களின் நலனில்தான் நிதிநிலை அறிக்கை நாட்டம் கொண்டிருக்கிறது" என்ற காங்கிரசு உறுப்பினர்களின் வாதங்களுக்குப் பதில் தந்திருக்கிறார்—**ஆர். என். அரங்கநாதன்**; புதிய வரிகள் இல்லாமல் இருப்பதும், விலைவாசி குறைந்திருப்பதும், பட்டிக்காடு—பட்டணம் அனைத்துக்கும் பொதுவானதுதானே" எனக் கேட்டிருக்கிறார் அவர்!

"மத்திய அரசு வழங்கியிருக்கும் 82 புதிய தொழிற்சாலை அனுமதிகளில் இந்த மாநிலத்துக்குக் கொடுத்திருப்பது இரண்டுதான்" என அவர் எடுத்துக்காட்டியிருக்கும் புள்ளிவிவரம், காங்கிரசு உறுப்பினர்களின் கவனத்துக்காகத்தான்!

கூட்டுறவுத் துறையில் கழக அரசு மேற்கொண்டிருக்கும் சீர்திருந்த நடவடிக்கைகளும், நிர்வாகச் செலவுகள் குறைப்பும் **ஈ. ஆர். கிருஷ்ணன்** அவர்களைக் கவர்ந்திருக்கிறது; 'சுகாதாரம், கல்வி ஆகிய இரண்டும், மாநில வரம்புக்குள் இருக்க வேண்டும்' என்பது அவரது கோரிக்கைகளில் சிறப்பானவையாகும்.

"சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறப்பாகக் கவனம் செலுத்தவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டிருக்கிறார் — **எம். கிருஷ்ணமூர்த்தி**. பேராவூரணிப் பகுதி மக்களின் தேவைகள், அவரது உரையில் நிறைந்து காணப்படுகின்றன.

இதேபோல், 'வேப்பூர் பகுதிக்கு மின்சார விரிவு தேவை' எனக் கேட்டிருக்கிறார் — **ஆர். நாராயணன்.**

"விவசாயிகளுக்கு இன்னும் விலைச் சலுகைகள் வேண்டும்" என **இராமராசன்** கோரியிருக்கிறார்.

"விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில், கழக அரசின் கொள்கைகள்—நடவடிக்கைகள் திருப்தி அளிக்கின்றன" என்று காங்கிரசுக் கொறடா பாராட்டியதற்கும் மேற்கொண்டு கழக உறுப்பினர் ஒருவர் இதுபோல் இன்னும் சலுகைகள் கேட்டிருப்பது, தொகுதியின் மீதுள்ள அக்கறையின் ஆழத்தைத்தான் காட்டுகிறது!

கடமைகளை இன்னும் சிறப்பாக நிறைவேற்றும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக வசதி தேவை" என்று **எம். ஆர். கண்ணன்** வேண்டிக்கொண்டிருக்கிறார். சில மாநிலங்களில், 'ஊதியம் அதிகம் தேவை' என்று சட்டமன்ற உறுப்பினர் கேட்டு—அது நிறைவேறியிருக்கும்போது, கடமைகளைச் செய்ய அலுவலக வசதியை மட்டும் கேட்கும் கண்ணனின் கோரிக்கையில், கொள்கை அளவில் தவறில்லையல்லவா?

அரிசன மக்களின் நலனில் அக்கறை காட்டும் கழக நிர்வாகத்துக்கு **கே. கிருஷ்ணமூர்த்தி** பாராட்டு வழங்கியுள்ளார். கல்விக்கான அதிக ஒதுக்கீடும் அவரது கவனத்தில் பதிந்த அம்சமாக இருக்கிறது!

இவரை ஒட்டிக் கருத்துத் தெரிவித்த வரிசையில், **ஆண்டி என்ற குருசாமியும்** வருகிறார்!

★

அண்ணா படித்த பொருளாதாரப் புத்தகத்தின் இங்கிலாந்து நாட்டுப் பேராசிரியர், பின்னர் அங்கே தலைமையமைச்சராக வந்திருப்பதனையும், அந்தப் புத்தகத்தில் கூறியுள்ள — 'பின்னால் வரிகள் போடாமல் இருப்பது, முன்னால் போட்ட வரிகளை மக்கள் மறப்பதற்கு உதவும்' என்ற 'தந்திர'த்தைத்தான் முதலமைச்சர், தமது நிதிநிலை அறிக்கையில் கடைபிடித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்—காங்கிரசுக் கொறடா விநாயகம்!

"அந்தப் பொருளாதாரப் பேராசிரியர், பின்னால் இங்கிலாந்தின் தலைமையமைச்சராக ஆனதுபோல், இப்போது அண்ணாவும் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக வந்திருக்கிறார்" என்று விநாயகம் கூறியிருந்தால், அவரது நினைவுத்திறன் முழுமை பெற்றிருக்கும்!

அடுத்தாற்போல் ஒன்று; அண்ணா அவர்கள் அந்த நாளில் படித்த பொருளாதார நூலில் உள்ள 'தந்திரம்' காங்கிரசுக்காரர்களுக்குத்தானே உதவியிருக்கிறது என்பதனை, விநாயகம் ஏனோ உணரவில்லை! அண்ணா இப்போது வரி போடாதது, காங்கிரசார் முன்பு போட்ட வரிகளைத்தான் மக்களது நினைவுகளிலிருந்து அகற்றுகிறது!

அண்ணாவின் நினைவு—ஆற்றல், இந்த வகையிலும் காங்கிரசுக்கு நன்மையைத்தான் செய்திருக்கிறது!

அந்தப் பேராசிரியரைப் போலவே அண்ணாவும் முதலமைச்சராக வந்திருப்பதனைக் கூற மறந்த விநாயகம், 'அவர் இப்போது வரி போடாதது முன்பு காங்கிரசுக்காரர்கள் போட்ட வரிகளைத்தான் மறக்கச் செய்கிறது' என்பதனையும் உணரத் தவறியிருக்கிறார்!

அலமேலு அப்பாதுரை

மேலவை உறுப்பினர் ஆனார்

சென்னை, மார்ச் 4 -

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் திருமதி அலமேலு அப்பாதுரை, போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திட்டக் குழு உறுப்பினர் பதவியேற்ற முன்னாள் அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் விலகியதால் ஏற்பட்ட காலி இடத்திற்கு, திருமதி அலமேலு அப்பாதுரை தி.மு.க. வேட்பாளராக வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தார்; வேறு யாரும் எதிர்த்துப் போட்டியிடாததால், இவரே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இன்று அறிவிக்கப்பட்டது.

இவர், 1970 ஏப்ரல் 20-ம் நாள் வரை பதவி வகிப்பார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரின் துணைவியாரான திருமதி அலமேலு அப்பாதுரை அவர்கள், மாநகராட்சி உறுப்பினராகவும் இருந்து சிறந்த பணியாற்றியவர் என்பதும், தி.மு.க. துவக்க காலத்திலிருந்து கழகத்தில் தீவிரப் பணியாற்றிவருபவர் என்பதும், 1948 முதல் இந்தியை எதிர்த்து நடந்த பல அறப்போர்களிலும் பங்கேற்றுச் சிறை சென்றவர் என்பதும் தெரிந்ததே.

நடக்க இருப்பவை

மார்ச் 6: தி. மு. க. அரசு

ஓராண்டு நிறைவு விழாப்

பொதுக்கூட்டங்கள்

சிட்லப்பாக்கம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர்: இரா. சீதாபதி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., முனு ஆதி எம்.எல்.ஏ., எம். குமார், மௌலானா, பா. செயராமன், முத்துசாமி, து. கிருட்டினன், மற்றும் பலர்.

செம்போடை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு இரத்தினசாமி தேநீர் நிலையம் அருகில்; தலைவர்: கி. முருகையன்; பேசுவோர்: செ. யூசுப், வே. கோதண்டபாணி, சா. குமரவேல், வி. சுப்பிரமணியன்.

செஞ்சி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு செட்டிப்பாளையம் நவாப் குளக்கரையில்; தலைவர்: வி. வரதன்; பேசுவோர்: வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.எல்.ஏ., அபுபக்கர், எஸ். எச். அக்பர்.

தாயில்பட்டி

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 7-மணிக்கு பஞ்சாயத்துத் திடலில்; தலைவர்: வெ. அழகர்சாமி; பேசுவோர்: ச. அமுதன் பி.ஏ., க. சு. மணிமாறன், செ. முத்தையா, க. சுப்பிரமணியம் து. மாரியப்பா.

காட்டுமன்னார்குடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு உடையார்குடி சிவன் கோயில் அருகில்; தலைவர்: கோ. துரைராசன்; பேசுவோர்: எம். ஆர். கிருட்டினமூர்த்தி, இரா. க. சீனிவாசன், லா. ந. இராமலிங்கம், எச். முகம்மது, ஜே.எம். ஜக்கிரியா, மற்றும் பலர்.

கைத்தறிப் பொருட்காட்சி

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில், சென்னை-எழும்பூர் பாந்தியன் சாலையில் நடைபெறும் பொருட்காட்சியில், 6—3—68 மாலை 6-மணிக்கு, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், திரு. முத்து ராஜாக்கண்ணனார் எம்.ஏ., பி.ஓ.எல். சொற்பொழிவாற்றுவார்; இரவு 7-மணிக்கு 'தெய்வமாகி நின்றாள்' என்ற நாடகம் நடைபெறும்.

கோட்டாறு குறள்நெறிக் கழகம்

குமரி மாவட்டம் கோட்டாறு குறள்நெறிக் கழகச் சார்பில் 7—3—68 மாலை 6-மணிக்கு நாகர்கோவிலில், திரு. வி. கே. சி. நடராசன் ஐ.ஏ.எஸ். தலைமையில், புலவர் அறிவுடைநம்பி, 'வள்ளுவர் கண்ட இரவு' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம்

தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் 6—3—68 மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தில், 'தமிழும் மலையாளமும்' என்ற தலைப்பில், திரு. எஸ். நல்லபெருமாள் பி.ஏ., பி.எஸ்சி., டாக்டர் எஸ். கே. நாயர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இலக்கிய மன்ற ஆண்டுவிழா

சென்னை—திருவல்லிக்கேணி கெல்லட் உயர்நிலைப் பள்ளி இலக்கியமன்ற ஆண்டுவிழா 6—3—68 மாலை 3-30 மணிக்கு தலைமையாசிரியர் திரு. விக்டர் பி.ஏ.பி.டி. தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி. சொற்பொழிவாற்றுவார்.

நீடாமங்கலம் பேரூராட்சி மன்றம்

பெரியாருக்கு வரவேற்பு— அண்ணா படத் திறப்பு

நீடாமங்கலம் பேரூராட்சி மன்றச் சார்பில், 6—3—68 மாலை 4-மணிக்கு மன்னை திரு. ப. நாராயணசாமி தலைமையில், மன்ற அலுவலகத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்; அதுபோது, திரு ஜி. இராமச்சந்திரன் அன்பளிப்பாக வழங்கியுள்ள முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை, பெரியார் அவர்கள் திறந்துவைப்பார்; பலர் சொற்பொழிவாற்றுவர்.

தீ விபத்துத் துயர் துடைப்புச் சீரமைப்பு நிதி

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு, பிப்ரவரி 28-ந் தேதி வந்த தொகை ரூ. 5,880.01 ஆகும்.

இத்துடன் மொத்தம் ரூ. 36,02,090.01 சேர்ந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.